வேலைகளுடன் என்ன செய்ய வேண்டுமென்றும் எப்படிப்பட்ட வேலைகள் செய்ய வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கேள்வி மின்சார அபிவிருத்திக்காக கடன் ஒதுக்கப்பட்டது சம்பந்தமானது. தவிர அதற்கு என்று முப்பது லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு அதுவும் பத்தொன்பது ப்ளாக்குகளுக்கு அதை பங்கிட்டு கொடுக்கப்பட்டு அந்தந்த ப்ளாக்குகளில் அவை செலவிடப்பட வேண்டும் என்று இருக்கிறது.

SRI S. LAZAR : லைசென்சுதார்களுக்கும் இப்பொழுது பணம் ஒதுக்கப்படுகிறது. ப்ளாக் டெவலப்மெண்ட் கமிட்டிக்கு என்று ஒதுக்கப்பட்ட தொகையை எடுத்து மின்சார போர்டுக்குக் கொடுப்பது போன்று லைசென்சு தாரர்களுக்குக் கொடுக்கப்பட்ட அந்தப் பணத்தையும் செலவு செய்வதற்கு சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த முப்பது லட்சம் ரூபாயையும் தனிப்பட்ட லைசென்சிகளுக்குக் கொடுப்பதற்கு இல்லை. பூரா வையும் போர்டுக்குக் கொடுத்து செலவிடப்படும்.

SRI C. MUTHIAH PILLAI : அபிவிருத்தி தொகுதிகளில் லைசென்சுதாரர்களுக்கு கடன் கொடுத்தும் அந்தத் தொகுதிகளில் இன்னும் வேலை ஆரம்பிக்கப்படவில்லை. அதைப்பற்றி ப்ளாக் அட்வைசரி கவுன்சிலில் ஒரு தீர்மானம் போட்டு இருக்கிறது. ஆகவே அந்தந்தத் தொகுதிகளில் என்னென்ன வேலைகள் செய்ய வேண்டும் என்பதை முன் கூட்டியே நிர்ணயம் செய்து அவற்றை அந்த திட்டத்தில் சேர்ப் பதற்கு வேண்டிய ஏற்பாட்டை அட்வைசரி கவுன்சில் செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : தனிப்பட்ட லைசென்சிகள் இருக்கக்கூடிய பகுதிகளில் அவர்களுக்குக் கடன் கொடுக்கக்கூடியது வேறு விஷயம். அவர்கள் குறிப்பிட்ட வேலைகளுக்குக் கடன் வேண்டு மென்று சர்க்காருக்கு விண்ணப்பம் செய்தால் அதைப்பற்றி சவனித்து அவர்களுக்கு பணம் ஒதுக்கப்படுகிறது. மின்சார அபிவிருத்திக்காக ஒவ்வொரு பகுதிகளிலும் அபிவிருத்திக்கு என்று ஒதுககப்பட்டு இருக்கும் தொகை அங்கே எவ்வளவு செலவு செய்ய வேண்டும் எனபதைப்பற்றி அங்குள்ள ஆலோசனை சபை கவனித்து அதன் படியே செய்யும் என்று நான் நம்புகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : தஞ்சை ஜில்லாப் பகுதிகளில் அதாவது சவுத் மெட்ராஸ் எலெக்ட்ரிக் சப்ளை கார்பொரேஷன் பகுதி களில் இப்படி வேலைகளுக்கு என்று கடன் கேட்டிருக்கிறார்கள். கடன் வேண்டுமென்று மனுக் கொடுத்திருக்கிறார்கள். அந்த மனுக்கள் எவ் வளவு வருஷங்களாக சர்க்காரிடம் பரிசீலனையில் இருந்து கொண்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : : கனம் மின்சார மந்திரி அவர்களுக்கு இதைப்பற்றி தனியாகக் கேள்வி போட்டால் அவர் அதற்கு பதில் சொல்வார்.

State Rolling cup for agricultural production.

*2 *Q*.—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) இம் மாநிலத்தில் ராஜ்ய கலசப் பரிசு விவசாயத்தில் முதன்மை ஸ்தானம் பெறும் ஜில்லாவிற்கு அளிக்கும் உத்தேசமுண்டா ?

(ஆ) அப்படியானால், அதன் முழு விவரம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The answer is in the negative.

(*b*) Does not arise.

5th February 1959]

SRI A. VEDARATHNAM : இதர மாகாணங்களில் இம்மாதிரி உற்பத்தியை அதிகரிப்பதற்கு என்று கலச பரிசு வழங்கப்பட்டு வருகிறது. அதுபோல் உற்பத்தியில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு அம்மாதிரி பரிசு வழங்குவதற்கு இந்த அரசாங்கமும் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு கலச பரிசு வழங்குவது என்பது முடியாத காரியம். அப்படி நிர்ணயம் செய்வதில் கொஞ்சம் சிரமமாக இருக்கும். இப்பொழுது ராஜ்யத்திற்கு ஒரு பரிசு அதாவது ரூ. 300 என்றும் வைக்கப்பட்டிருக்கிறது. ரீஜனல் முறையில் அதாவது மூன்று அல்லது நான்கு மாவட்டங்களுக்கு ஒரு பரிசு என்று வைக்கப்பட்டிருக்கிறது. பரிசு தொகை ரூ. 100. ஒவ்வொரு தாலுக்காவிற்கும் 50 ரூபாய் பெறுமானமுள்ள ஒரு பரிசு வைக்கப்பட்டிருக்கிறது. அதைப்போலவே பிர்க்காவுக்கும், வைக்கப்பட்டிருக்கிறது. அந்தந்த பிர்க்காவிற்கு என்று வைத்து எங்கே அதிகப்படியாக யார் உற்பத்தி செய்கிறார்களோ அவர்களுக்கு அந்தப் பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

SRI S. NAGARAJA MONIGAR : ஒருக்கால் இந்த மாதிரி பரிசு வழங்கப்படும்போது சுயமாகவே காவிரி பாயும் தஞ்சை ஜில்லா இதிலிருந்து விலக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஒருக்காலும் இந்தப் பிரச்னை இந்த கேள்வியில் எழவில்லை.

SRI V. K. KOTHANDARAMAN : இப்பொழுது கொடுக்கப்படும் பரிசுகள் நில சொந்தக்காரர்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. அந்தந்த நிலங்களில் விவசாயம் செய்யக்கூடியவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. ஆகவே உண்மையாகவே யார் விவசாயம் செய்கிறார்களோ அவர்களுக்கும் கொடுப்பதற்கு சர்க்கார் முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினருக்கு இது தெரிந்திருக்காது என்று நினைக்கிறேன். யார் உண்மையிலேயே உழுது விவசாயம் செய்கிறார்களோ அவர்களுக்குத்தான் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. அவர்கள் தான் இந்தப் பரிசுக்கு போட்டியிடவேண்டும்.

District Publicity Officers

* 3 *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether persons, who were found unfit by the Madras Public Service Commission last year to hold the post of Public Relations Officer, have since been appointed by the Government as District Publicity Officers; and

(*b*) if so, the reasons for the same?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, one person, has been so appointed.

(*b*) The Officer in question possesses all the qualifications prescribed for the post, which are as follows :—

(1) A University Degree.

(2) Three years of journalistic experience.

(3) Age not more than 45 and not below 25 years at the time of appointment.